[1973 மார்ச் 29

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : இப்போது வர இருக்கின்ற இந்தச் சட்டத்தினுல் விவசாய வருமானத்தைப் பெற்றுக்கொண்டிருப் பவர்களில் எத்தனை பேர் பாதிக்கப்படுவார்கள் என்ற விவரத்தை நம்முடைய இலாகாவினர் தயாரித்திருக்கிறுர்களா? ஒட்டுமொத்த மாக எத்தனை "அசசீஸ்" இதில் சம்பந்தப்பட்டவர்களாக இருப் பார்கள்?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : அதற்கான விவரம் இல்லை. தமிழ் நாட்டில் இருக்கின்ற "பிளாண்டர்ஸ்" எல்லாம் இதில் வருவார்கள் என்று நினைக்கிறேன்.

கும்முடிப்பூண்டித் துணை வட்ட அலுவலகக் கட்டடம்

* 562 வினு.—திரு. கா. வேழவேந்தன் : மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுவுக்கு விடை யளிப்பாரா—

கும்முடிப்பூண்டித் துணை வட்ட அலுவலகத்திற்கான சொந்தக் கட்டடம் கட்டுவதில் ஏற்படும் தாமதத்திற்குக் காரணம் என்ன?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : செங்கை மாவட்ட ஆட்சி யாளரிடமிருந்து, கும்முடிப்பூண்டித் துணை வட்ட அலுவலகத்திற்கு கட்டடம் கட்டுவதற்கான செயற் குறிப்பு இதுவரை அரசுக்கு வரவில்லையாகையால், கட்டடம் கட்டுவதில் காலதாமதம் ஏற்பட்டது என்ற பிரச்சினைக்கு இடமில்லை.

திரு. கா. வேழவேந்தன் : துணைத் தலைவர் அவர்களே, இது ஏற்கெனவே வாடகைக் கட்டடத்தில் நெருக்கடியான சூழ்நிலையில் நடந்துகொண்டிருக்கிறது. இதை அரசு மறுபரிசீலனை செய்து இந்த ஆண்டே இந்த வேலையைத் துவங்க முன்வருமா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தமிழ்நாட்டில் 43 துணை வட்டங்களில் 21 துணை வட்ட அலுவலகம் வாடகைக் கட்டடங் களிலேயே இருக்கிறது. எல்லாவற்றுக்கும் சொந்தக் கட்டடம் கட்ட வேண்டும் என்பது தான் அரசின் நோக்கம். நிதிநிலை இடம் தருகிற நேரத்தில் இவை எல்லாம் எடுத்துக்கொள்ளப்படும்.